புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 · இதழ்: 243 · 09-03-2026 · திங்கள் · பக்கம்- 4 · விலை- ரூ.5 · திருச்சி- புதுச்சேரி
Volum 01 · Issue: 243 · 09-03-2026 · Monday · Pages - 4 · Price- Rs. 5 · Trichy-Puducherry

## ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்க எந்த நாட்டின் அனுமதியும் தேவையில்லை: அமெரிக்காவுக்கு மத்திய அரசு பதிலடி

புதுடெல்லி: மார்ச். 9–

ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்க எந்த நாட்டின் அனுமதியும் தேவையில்லை என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள போர் பதற்றம் காரணமாக, ஹார்முஸ் ஜலசந்தியில் சரக்கு கப்பல் போக்குவரத்து தடைபட்டு, உலக அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கச்சா எண்ணெய் விலை சுமார் 30 சதவீதத்துக்கு மேல் உயர்ந்துள்ளது.

இந்தச் சூழலில், 30 நாட்களுக்கு ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கிக் கொள்ள இந்தியாவுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறியிருந்தார். இதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.

இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில், "ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதற்கு இந்தியா ஒருபோதும் எந்த நாட்டின் அனுமதியையும் சார்ந்து இருந்ததில்லை" என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் "ஹார்முஸ் பாதையில் பதற்றம் அதிகரித்து வரும் நிலையிலும், இந்தியாவின் எரிசக்தி விநியோகம் பாதுகாப்பாகவும் சீராகவும் உள்ளது. இந்தியா தனது கச்சா எண்ணெய் ஆதாரங்களை 27 நாடுகளிலிருந்து 40 நாடுகளாக பன்முகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் பல மாற்று விநியோகப் பாதைகளை உறுதி செய்துள்ளது. தேசிய நலன் கருதி, எங்கெல்லாம் மிகவும் மலிவான விலையில் எண்ணெய் கிடைக்கிறதோ, அங்கிருந்து இந்தியா அதனை வாங்குகிறது" என கூறப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் ரிங் மெட்ரோ ரயில் பாதை: டெல்லியில் பிரதமர் தொடங்கி வைத்தார்!



புதுடெல்லி: மார்ச்.9–

டெல்லியில் இந்தியாவின் முதல் ரிங் மெட்ரோ ரயில் பாதையை பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்தார்.

டெல்லி பிங்க் பாதையின் 12.3 கிமீ நீளமுள்ள மஜ்லிஸ் பார்க் மௌஜ்பூர் பாபர்பூர் பாதையையும், மெஜந்தா பாதையின் 9.9 கிமீ நீள தீபாலி சௌக்மஜ்லிஸ் பார்க் நீட்டிப்பையும் பிரதமர் நரேந்திர மோடி இன்று திறந்து வைத்தார்.

மேலும், டெல்லி மெட்ரோ திட்டத்தின் கட்டம் V(A)ன் கீழ் மூன்று புதிய வழித்தடங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார். முழு பிங்க் பாதையும் இப்போது ஒரு வட்ட ரிங் பாதையாக மாறியுள்ளது. இது நாட்டின் முதல் ரிங் மெட்ரோ வலையமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.

மஜ்லிஸ் பார்க் மௌஜ்பூர் பாபர்பூர் பிரிவில் ஒன்பது நிலையங்கள் உள்ளன, அனைத்தும் இப்போது மேலே உயர்த்தப்பட்டுள்ளன. புதிய பிங்க் லைன் வழித்தடத்தில் யமுனை நதியின் மீது ஒரு புதிய பாலத்தில் மெட்ரோ பாதை மற்றும் சாலை மேம்பாலம் இரண்டையும் கொண்ட இரட்டை அடுக்கு வழித்தடம் அமைக்கப்பட்டுள்ளது.

மதுபன் சௌக், உத்தர் பிதம்புரா பிரசாந்த் விஹார், ஹைதர்பூர் பத்லி மோர் மற்றும் பலஸ்வா போன்ற பகுதிகளை இணைக்கும் மெஜந்தா பாதையின் நீட்டிப்பான தீபாலி சௌக்மஜ்லிஸ் பார்க் வழித்தடத்தையும் பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

மெஜந்தா பாதை வழித்தடத்தின் சில பகுதிகள் சுமார் 28.36 மீட்டர் உயரத்தில் உள்ளன. இது டெல்லி மெட்ரோ வலையமைப்பில் மிகவும் உயரத்திலுள்ள பகுதிகளில் ஒன்றாகும். சுமார் ரூ.33,500 கோடி மதிப்புள்ள மேம்பாட்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாக இருக்கும் புதிய பிங்க் மற்றும் மெஜந்தா லைன் வழித்தடங்கள், டெல்லி முழுவதும் ஆயிரக்கணக்கான தினசரி பயணிகளின் பயண நேரத்தைக் குறைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், டெல்லி மெட்ரோ திட்டத்தின் கட்டம் ஷிகி இன் கீழ் ராமகிருஷ்ணா ஆசிரம மார்க்டு இந்திரபிரஸ்தா வழித்தடம், ஏரோசிட்டிடு இந்திரா காந்தி சர்வதேச விமான நிலைய முனையம் 1 வழித்தடம் மற்றும் துக்ளகாபாத்–காளிந்தி குஞ்ச் வழித்தடம் ஆகிய மூன்று புதிய டெல்லி மெட்ரோ வழித்தடங்களுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

மெட்ரோ திட்டங்களுடன், பிரதமர் மோடி டெல்லியில் சுமார் ரூ.33,500 கோடி மதிப்புள்ள மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடங்கி வைத்து அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சிக்கு முன், பிரதமர் மோடி சரோஜினி நகரில் புதிதாக கட்டப்பட்ட ஜிஆர்ஆர்ஏ வகை 5 குடியிருப்புகளைப் பார்வையிட்டு, வீடுகள் ஒதுக்கப்பட்ட பெண்களிடம் சாவிகளை ஒப்படைத்தார்.

## அடுத்து அமைய உள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில் மகளிர் உரிமைத்தொகை ரூ.2000 ஆக உயரும்: முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு




சென்னை: மார்ச்.9–

தமிழகத்தில் அடுத்து அமையவுள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில், மகளிர் உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தப்படும் எனவும் இப்போதே அறிவித்துள்ளோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் 'உலக மகளிர் நாள்' வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள 'உலக மகளிர் நாள்' வாழ்த்துச் செய்தி: உலகை இயக்கும் பேராற்றலான என் அன்புக்குரிய தாய்மார்கள், சகோதரிகள் அனைவருக்கும் இனிய உலக மகளிர் நாள் வாழ்த்துகள்!

'பெண் ஏன் அடிமையானாள்?' எனக் கேள்வி எழுப்பி விழிப்புணர்வை ஏற்படுத்தினார் தந்தை பெரியார். அவரது கொள்கை வழித்தோன்றலாக கலைஞர் பெண்களுக்கு சொத்தில் சமபங்கு உரிமை அளித்து சட்டம் நிறைவேற்றினார். அரசு பணியிடங்களில் இடஒதுக்கீடு அளித்தார். இத்தகைய பெண்ணின காவலர்களின் வழியிலான நமது திராவிட மாடல் அரசு இந்த ஆட்சியையே மகளிரின் உயர்வுக்கான ஆட்சியாக நடத்தி வருகிறது.

பெண்கள் சுதந்திரமாக ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்துக்கு சென்று வர விடியல் பயணம், அவர்களின் சமூக பங்களிப்பை அங்கீகரிக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம், அவர்களின் உயர்கல்வியை உறுதிசெய்யும் புதுமைப்பெண், அவர்களின் சமையல் சுமையை குறைக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், அவர்கள் பாதுகாப்பாக தங்க தோழி விடுதிகள், தனியார் தொழிற்சாலைகளிலும் அவர்களுக்கு குறிப்பிட்ட விழுக்காட்டில் பணியிடங்கள் ஒதுக்கீடு,

பெண்களின் பெயரில் சொத்துப்பதிவு செய்தால் பதிவுக்கட்டணத்தில் சலுகை, 14 வயதுக்குட்பட்ட சிறுமிகளுக்கு இலவசமாக கருப்பைவாய் புற்றுநோய் தடுப்பூசி, ஆதிதிராவிட பழங்குடியின பெண்களுக்கான நன்னிலம் நிலவுடைமை திட்டம், திருக்கோயில்களில் பெண் ஓதுவார்கள் நியமனம், பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புக்காக உலக வங்கியுடன் இணைந்த TN-WESAFE திட்டம், கிராமப் புறங்களில் இருந்தும் பெண் தொழில் முனைவோர்களை வளர்த்தெடுக்கும் TNRISE திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களால் நமது திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டு மகளிர், வெல்லும் தமிழ்ப் பெண்களாக வரலாறு படைத்து வருகின்றனர். தமிழ்நாடு செய்தித்தாள்

அடுத்து அமையவுள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில், மகளிர் உரிமைத் தொகை ரூ.2 ஆயிரம் உயர்த்தப்படும் எனவும் இப்போதே அறிவித்துள்ளதுடன், மூன்று மாதங்களுக்கான தொகையை முன்பணமாகவும், ரூ.2 ஆயிரம் கோடைக்கால சிறப்பு நிதியாகவும் தமிழ்நாடு முழுவதும் 1.31 கோடி மகளிரின் வங்கி கணக்குகளில் வரவு வைத்து அவர்கள் மனம் மகிழச் செய்துள்ளோம்.

தரமான கல்வியும், உயர் வேலைவாய்ப்புகளும் தன்னிறைவும், பொருளாதார சுதந்திரமும், அனைத்துக்கும் மேலாக சிறந்த உடல்நலனும் கொண்டவர்களாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மகளிரையும் உயர்த்தும் சமூக விடுதலை இலக்கினை அடுத்த 5 ஆண்டுகளில் உறுதியாக அடைவோம். ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட தமிழ்நாடு எனும் என் லட்சிய கனவை முன்னின்று நிறைவேற்ற போவது நீங்கள்தான். உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது மகளிர் நாள் நல்வாழ்த்துகள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## தேர்தலுக்கு முன்னேற்பாடு: 211 துணை ராணுவப் படையினர் சென்னை வருகை

சென்னை. மார்ச்.9–

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முன்னேற்பாடாக 211 துணை ராணுவப்படையினர் நேற்று சென்னை வந்தனர். அவர்கள் தங்குவதற்காக சென்னை மாநகராட்சி திருமண மண்டப முன்பதிவுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. இதற்காக செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடுகளை கடந்த பிப்.26ம் தேதி தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தமிழகத்துக்கு நேரில் வந்து, மாவட்ட ஆட்சியர்கள், எஸ்பிக்கள், ஐஜிக்கள், தலைமைச் செயலர், டிஜிபி, ஐடி, ஈடி அதிகாரிகள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், ஏற்கெனவே தமிழகத்தில் உள்ள 234 தொகுதிக்கும் தேர்தல் நடத்தும் அலுவலர்களை நியமித்த நிலையில், நேற்று முன்தினம் அவர்களுக்கும், தகவல் தொழில்நுட்ப உதவிப் பணியாளர்களுக்கும், தேர்தல் ஆணைய செயலிகளான இசிஐ நெட் (ECINET), இடிப்பிபிஎம்எஸ் (ETPBMS) பயன்பாடுகள், தேர்தல் நடத்தை விதிகள் கண்காணிப்பு, கட்டணச் செய்தி கண்காணிப்பு உள்ளிட்ட பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

ஏற்கெனவே, தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலை அமைதியாக நடத்தவும், தேர்தல் பாதுகாப்பாக நடத்தப்படுகிறது என்ற நம்பிக்கையை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் வகையிலும், முதற்கட்டமாக துணை ராணுவப் படையின் 50 கம்பெனிகள் தமிழகத்துக்கு அனுப்பப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்திருந்தது.

அதனடிப்படையில், நேற்று 211 துணை ராணுவப் படையினர் சென்னை வந்தடைந்தனர். அவர்கள் சென்னையில் பல்வேறு பகுதிகளில் உள்ள மாநகராட்சி திருமண மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். வரும் நாட்களில் தொடர்ந்து துணை ராணுவப்படையின் 50 கம்பெனிகளும் வரவுள்ளன. அப்படையினர் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு பிரித்து அனுப்பப்பட உள்ளனர்.

இதற்கிடையே, சென்னை மாநகராட்சி வசம் 55 திருமண மண்டபங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தேர்தலின்போது பாதுகாப்பு பணியில் ஈடுபடும் துணை ராணுவப் படையினர் தங்குவதற்காக இந்த மண்டலங்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

அதனால் இந்த 55 திருமண மண்டபங்களின் முன்பதிவு, கடந்த பிப்.26 முதல் ஜூன் 15ம் தேதி வரை முன்பதிவு நிறுத்தப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தை விதிகள் முடிவுக்கு வந்த பிறகு, மீண்டும் முன்பதிவு தொடங்கும் என மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதே போன்று தமிழகத்தின் பிற மாநகராட்சிகளின் பராமரிப்பில் உள்ள திருமண மண்டபங்களிலும் முன்பதிவு நிறுத்தப்பட்டுள்ளது.

## சட்டசபை தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட வரலாறு காணாத வகையில் 15,372 பேர் விண்ணப்பம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் விரைவில் நேர்காணல்

சென்னை: மார்ச்.9–

சட்ட சபை தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட வரலாறு காணாத வகையில் 15,372 பேர் விண்ணப்பம் செய்துள்ளனர். அவர்களிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் விரைவில் நேர்காணல் நடத்த உள்ளார். தமிழக சட்டப்பேரவை தேர்தல் அடுத்த மாதம் நடைபெற உள்ளது. ஆளுங்கட்சியான திமுக சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் கடந்த மாதம் 20ம் தேதி முதல் சென்னை அண்ணா அறிவாலயத்தில் பெறப்பட்டு வந்தது.

தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும், புதுச்சேரியில் உள்ள 30 சட்டமன்ற தொகுதிகளுக்கும் விருப்ப மனுக்கள் பெறப்பட்டது. விருப்ப மனு அளிக்க திமுகவினரிடம் காணப்பட்ட உற்சாகத்தால் விருப்ப மனுவுக்காக கால அவகாசம் மார்ச் 6 வரை வரை நீட்டிக்கப்பட்டது. தற்போதைய அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் மீண்டும் அதே தொகுதியில் போட்டியிடவும், நிர்வாகிகள் பலரும் விருப்ப மனு வழங்கினர்.

மேலும் முதல்வர் மு.க.ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தங்கள் தொகுதியில் போட்டியிட வேண்டும் என்றும் நிறைய பேர் விருப்ப மனு அளித்தனர். 14 நாட்களாக நடந்த விருப்ப மனு விநியோகம் நேற்று முன்தினம் முடிந்தது. கடைசி நாளன்று அண்ணா அறிவாலயம் தொண்டர்கள் வெள்ளத்தில் திக்குமுக்காடியது. நேற்று முன்தினமும் அமைச்சர்கள், முக்கிய நிர்வாகிகள் விருப்ப மனு அளித்தனர்.

வரலாறு காணாத வகையில் மொத்தம் 15,372 விருப்ப மனுக்களை வழங்கியுள்ளனர். திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தங்கள் தொகுதியில் போட்டியிட வேண்டும் என 1,473 விருப்ப மனுக்கள் அளிக்கப்பட்டுள்ளன. வரும் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் திமுகவின் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைவது உறுதியாகிவிட்ட உற்சாகத்தில் சட்டமன்ற தேர்தலில் போட்டியிட திமுகவினர் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று திமுக தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விருப்ப மனு முடிவடைந்துள்ள நிலையில் வேட்பாளர் நேர்காணல் எப்போது நடைபெறும் என்ற எதிர்பார்ப்பு நிர்வாகிகள் மத்தியில் எழுந்துள்ளது. தற்போது கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீட்டை இறுதி செய்வதில் திமுக முனைப்பு காட்டி வருகிறது.

கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை சுமுகமாக முடிவடைந்தவுடன் திமுக போட்டியிடும் தொகுதிகள் அடையாளம் காணப்படும். இதை தொடர்ந்து அந்த தொகுதிகளுக்கு விருப்ப மனு அளித்தவர்களை மாவட்ட வாரியாக அழைத்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேர்காணல் நடத்தி வேட்பாளரை முடிவு செய்வார்.

# விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் இனமான பேராசிரியர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.



விழுப்புரம், மார்ச். 9–

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் இனமான பேராசிரியர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் இனமான பேராசிரியர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

இதை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில்அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த இனமான பேராசிரியரின் திருவுரவ ப்படத்திற்கு செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் ,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான்எம் எல் ஏ மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்துகழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 9 தேதி திருச்சி மாவட்டத்தில் நடைபெறும் கழக நிர்வாகிகள் சந்திப்பு மாநாட்டில் கழக நிர்வாகிகள் ,பொது மக்களுக்கு அழைப்பு விடுத்தமுதலமைச்சரின் அழைப்பிதழை கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களிடம் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வழங்கி மாநாட்டில்கலந்து கொள்ள வேண்டும் என முதலமைச்சரின் அழைப்பிதழை வழங்கினார்.

நிகழ்ச்சியில்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், . மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் ,வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் மொடையூர் துரை, மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, நகர பொருளாளர் நெடுஞ்செழியன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், சங்கர், பொன்னம்பலம், சிவகுமார்,நூர்ஜகான் ஜாபர்ஒன்றிய அவைத் தலைவர் வாசு, மாவடடபிரதிநிதி அய்யாதுரை, வீடூர் பிரகாஷ், மாவட்ட அமைப்புசாரா தொழிலாளர் அணிஅமைப்பாளர் தமிழரசன், நிர்வாகிகள் சீனிவாசன் , தொண்டரணி பாஷா, சந்திரன், ,செழியன், நிர்வாகிகள் ,உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நிழற் கூரை பணி பூமி பூஜை!!



திருப்பூர் மாநகராட்சி 36 வது வார்டுக்குட்பட்ட சின்னான் நகர் பகுதியில் அமைந்துள்ள மாகாளியம்மன் கோவில் முன்புறம் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிழற்கூரை அமைக்க பூமி பூஜை விழாவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மத்திய மாவட்ட கழக செயலாளர் க.செல்வராஜ் துவக்கி வைத்தார். உடன் தெற்கு மாநகரக் கழகச் செயலாளர் மு. நாகராசன் ,36 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கல்வி நிலைக்குழு தலைவர் பெ.திவாகரன், பி. எஸ் பாண்டியன் ,குட்டி பாய்,ஜெயகிரி, அன்பு,செல்வம், மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர்க்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி



திருவண்ணாமலையை தலையிடமாக கொண்டு தமிழகம் முழுவதும் செயல்பட்டு வரும் அம்மை அப்பர் தொண்டு நிறுவனம், செஞ்சி சிறுகடம்பூர் சுப்பிரமணியசாமி கோவில் வெற்றிவேலன் அறக்கட்டளை இணைந்து உலக மகளிர் தினத்தை முன்னிட்டு தன்னம்பிக்கை நிகழ்ச்சி நடத்தினர்.

மக்கள் வெளிச்சம் சிறப்பு செய்தியாளர் தங்கராசு தலைமையேற்று, மக்கள் வெளிச்சம் ஆசிரியர் சுரேஷ்குமார், ஆல் மீடியா பிரஸ் ஜானலிஸ்ட் மாநிலத் துணைத் தலைவர் பாரதி, மாநில செயற்குழு உறுப்பினர் சுரேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் இதில் திருவண்ணாமலையை சேர்ந்த சிலம்பம் பயிற்சியாலர் கல்பனா வயது 36, பெண்களுக்கு தன்னம்பிக்கையும், விழிப்புணர்வும் ஏற்படுத்தும் வகையில

பற்களால் 200 மீட்டர் தூரம் காரை இழுத்து சாதனை நிகழ்ச்சி நடத்தினர்.

மேலும் இவரின் சிறப்பு பாலியல் வன்கொடுமையை தடுக்கும் விதமாக 2555 ஆணிகள் மீது 51 யோகா ஆசனங்கள் செய்து யுனிவர்சல் புக் ஆப் ரெக்கார்டில் இடம் பெற்றுள்ளார்,

உலக மகளிர் தினத்தன்று பெண்களை ஊக்குவிக்கும் வண்ணமாக தலைமுடியில் 1500 கிலோ எடை கொண்ட காரை கட்டி 400 மீட்டர் வர இழுத்துச் சாதனை படைத்துள்ளார்

போதைப் பொருளை தடுக்கும் விதமாக உலக மகளிர் தினத்தன்று இரு கண்களையும் கட்டிக்கொண்டு இருசக்கர வாகனத்தை 8 கிலோமீட்டர் வரை ஓட்டியுள்ளார்,

நிகழ்ச்சியின் இறுதியில் இந்தியன் வங்கி மேலாளர் அமீர் ஜான் பொன்னாடை போர்த்தி பரிசுகளும் வழங்கினார், இறுதியில் ஆல் மீடியா பிரஸ் ஜர்னலிஸ்ட் யூனியன் மாவட்ட தலைவர் ரமேஷ் நன்றி கூறினார்.

# சேலம் கோட்டத்தில் பிப்ரவரி மாதத்தில் ரூ.2.32 கோடி அபராதம்.

சேலம் ரயில்வே கோட்டத்தில் கடந்த பிப்ரவரி மாதத்தில் ரயில்களில் பயணச்சீட்டு இன்றி பயணித்தது உள்ளிட்ட விதிகளை மீறியதாக 28,306 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு,ரூ.2.32 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும் ரயில்களில் பயணச்சீட்டு இன்றியும், முறைகேடாகவும் பயணம் செய்யும் நபர்களை டிக்கெட் பரிசோதகர்கள் பிடித்து அபராதம் வசூலித்து வருகின்றனர். இந்நிலையில், தெற்கு ரயில்வேக்கு உள்பட்ட சேலம் ரயில்வே கோட்டத்தில் கோட்ட மேலாளர் பன்னாலால் உத்தரவின் பேரில், கோட்ட முதுநிலை வணிக மேலாளர் வாசுதேவன் தலைமையிலான குழுவினர் தீவிர சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில், கடந்த பிப்ரவரி மாதத்தில், சேலம் கோட்ட பகுதியில் இயங்கும் ரயில்களில் டிக்கெட் பரிசோதகர்கள் நடத்திய சோதனையின் மூலம் பயணச்சீட்டு இன்றி பயணித்தது தொடர்பாக 14,891 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதன் மூலம் ரூ. 1,42,54,693 அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது.

அதேபோல, முன்பதிவில்லா பயணச்சீட்டு எடுத்து முன்பதிவு பெட்டிகளிலும், இரண்டாம் வகுப்பு முன்பதிவு பயணச்சீட்டை வைத்துக்கொண்டு ஏ.சி. பெட்டிகளிலும் முறைகேடாக பயணித்தது தொடர்பாக 13,368 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ரூ. 89,72,070 அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது.

ரயில்களில் விதிமுறைகளை மீறி அதிக பொருள்கள் எடுத்துச்சென்ற 47 வழக்குகள் பதியப்பட்டு, ரூ. 38,442 அபராதம் விதிக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக கடந்த பிப்ரவரி மாதத்தில் மட்டும் பயணச்சீட்டு இன்றி பயணம், முறைகேடான பயணம், அதிக லக்கேஜ் உள்ளிட்ட விதிமீறல் தொடர்பாக 28,306 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு,ரூ.2.32 கோடி அபராதம் வசூலிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# யுபிஎஸ்சி தேர்வில் தேசிய அளவில் புதுச்சேரி பெண் மருத்துவர் சிறப்பிடம்!

சிவில் சர்வீஸ் பதவிகளுக்கான யுபிஎஸ்சிதேர்வில் புதுச்சேரியை சேர்ந்த பெண் மருத்துவர் தேசிய அளவில் 306வது இடம் பிடித்துள்ளார்.

ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஎப்எஸ், ஐஆர்எஸ் உட்பட 23 சிவில் சர்வீசஸ் பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுகளை மத்திய அரசு பணியாளர் தேர்வு ஆணை யம் (யுபிஎஸ்சி) நடத்துகிறது. முதல் நிலை தேர்வு. முதன்மை தேர்வு. நேர்முக தேர்வு என மூன்று நிலைகளாக இத்தேர்வு நடத்தப்படுகின்றன.

அதன்படி 2025ம் ஆண்டுக்கான சிவில் சர்வீசஸ் தேர்வுகள் நடத்தி முடிக்கப்பட்டு, நேற்று முன்தினம் முடிவுகள் வெளியானது. இத்தேர்வில் புதுச்சேரியைச் சேர்ந்த பெண் மருத்துவர் வைகவி (26) தேசிய அளவில் 306வது இடம் பிடித்து வெற்றி பெற்றுள்ளார்.

இவரது தந்தை வேலு சரவணன். புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் நாடகத் துறையில் பேராசிரியராக பணியாற்றி வருகிறார். தாயார் முத்துலட்சுமி. தனது பள்ளிப்படிப்பை தனியார் பள்ளியில் முடித்த வைகவி, கடந்த 2022ம் ஆண்டு கோரிமேட்டில் உள்ள மகாத்மா காந்தி அரசு பல் மருத்துவ கல்லூரியில் பிடிஎஸ் முடித்தார்.

அதே பல் மருத்துவ கல்லூரியில் ஓராண்டு இளநிலை உள்ளிருப்பு பல் மருத்துவராக பணியாற்றினார். அதன் பிறகு, சிவில் சர்வீஸ் தேர்வுக்கு படித்து வந்த நிலையில் தனது 2வது முயற்சியிலேயே தேசிய அளவில் 306வது இடம் பிடித்துள்ளார்.

இது குறித்து வைகவி கூறும்போது, "சிறு வயதில் இருந்து டாக்டராக வேண்டும் என்பதுதான் ஆசை. அதன்படி பல் மருத்துவம் முடித்தேன். ஓராண்டு உள்ளிருப்பு பல் மருத்துவராகவும் பணியாற்றினேன். பிறகு, சிவில் சர்வீசஸ் தேர்வு எழுத வேண்டும் என்று எண்ணினேன். இதற்காக சென்னையில் உள்ள ஒரு ஐஏஎஸ் அகாடமியில் ஓராண்டாக படித்தேன். கடந்தாண்டு முதல் நிலை தேர்வின் போது உடல் நிலை சரியில்லாமல் போனது.

இதனால் முதல்நிலை தேர்வில் தகுதிபெற முடியவில்லை. பிறகு, வீட்டுக்கு வந்து ஓராண்டாக படித்து வந்தேன். தினமும் 8 முதல் 10 மணி நேரம் படித்தேன். பெற்றோர் உறுதுணையாக இருந்தனர். இதனால் 2வது முயற்சியிலேயே சிவில் சர்வீசஸ் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளேன். இது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது" என்றார்.

# திருவள்ளூர் அருகே இருசக்கர வாகனம் மீது லாரி மோதிய விபத்தில் 7 ம் வகுப்பு மாணவன் பலி : 2 பேர் பலத்த காயம் :

திருவள்ளூர் மார்ச் 09 :

திருவள்ளூர் அடுத்த மெய்யூர் பகுதியைச் சேர்ந்தவர் மதன்குமார் இவரது மகன் யஷ்வந்த், (13). திருவள்ளூர் அரசுநிதி உதவி பெறும் பள்ளியில் 7ஆம் வகுப்பு படித்து வந்தார். இவர் நேற்று மாலை பள்ளி முடிந்ததும் வீட்டிற்கு செல்வதற்காக நின்று கொண்டருந்தார்.அப்போது அவ்வழியே வந்த அதே ஊரைச் சேர்ந்த ஆவடி தனியார் கல்லூரியில் படித்து வரும் ராஜ்பிரியன்(19). தனது நண்பர் ரிஷி(18) என்வருடன் இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார்.

இதில் யஷ்வந்தை அவர்களது இரு சக்கர வாகனத்தில் ஏற்றிக்கொண்டு மெய்யூர் நோக்கி சென்று கொண்டிருந்தனர். அப்போது திருவள்ளூர் அடுத்த ஈக்காடு பகுதியில் சென்னை திருப்பதி தேசிய நெடுஞ்சாலை புறவழிச்சாலையில் புதிய மேம்பாலம் அருகே சென்று கொண்டிருந்தபோது பின்னால் வந்த லாரி இரு சக்கர வாகனம் மீது மோதிய விபத்தில் மூவரும் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தனர்.

இதனால் அப்பகுதியில் இருந்தவர்கள் 3 பேரையும் மீட்டு 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். அங்கு பள்ளி மாணவன் யஸ்வந்த் சிகிச்சை பலனின்றி பலியானார். மற்ற 2 பேரும் திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுகுறித்து தகவலறிந்த புல்லரம்பாக்கம் போலீசார் வழக்குப் பதிவு செய்து லாரியை பறிமுதல் செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் மெய்யூர் பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் பல்துறை ஒருங்கிணைப்பு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரும் இணை இயக்குநருமான வை.ஜெயக்குமார், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ப.ஜெயஸ்ரீ,தனி மாவட்ட வருவாய் அலுவலர்கள் (நில எடுப்பு) முனைவர் ஆனந்தகுமார், கவிதா,ஜெயராமன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) டீ.ஸ்ரீராம், 10 சட்டமன்ற தொகுதிகளின் வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# செஞ்சி டேனி கல்வியியல் கல்லூரி மற்றும் டேனி மெட்ரிகுலேஷன் பள்ளியில் உலக பெண்கள் தினம் மற்றும் தேசிய அறிவியல் தினம்





செஞ்சி மார்ச் 09:

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த மேல் களவாய் காரியமங்கலம் கூட்ரோடு அமைந்துள்ள டேனி கல்வியியல் கல்லூரி மற்றும் டேனி மெட்ரிக்குலேஷன் பள்ளி சார்பில் தேசிய அறிவியல் தினம் மற்றும் உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சிக்கு டேனி கல்வி குழுமத்தின் தலைவர் ஜாஸ்பர் தலைமை தாங்கினார். டேனி கல்வி குழுமத்தின் செயலாளர் டாக்டர் ஸ்டெல்லா பாக்கியவதி முன்னிலை வகித்தார். கல்வியாளர் முனைவர் சக்திவேல் நோக்கவுரை யாற்றினார் முதல்வர் மகாலட்சுமி அனைவரையும் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளர்களாக வல்லம் ஒன்றிய குழு பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் செஞ்சி அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் சந்திரா

கலந்து கொண்டு அறிவியல் கண்காட்சியை தொடங்கி வைத்து மகளிர் தின விழாவில் சிறப்புரை யாற்றினார்கள். டேனி கல்வியியல் கல்லூரி முதலாமாண்டு மாணவர்கள் சற்குணம் மகளிர் தின முக்கியத்துவம் பற்றியும் கோமதி மகளிர் விடுதலை பற்றி கவிதையும் வாசித்தார்.

இரண்டாம் ஆண்டு மாணவர் கீதாஞ்சலி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

தொடர்ந்து அறிவியல் கண்காட்சியை வல்லம் ஒன்றிய குழு பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் உதவி ஆய்வாளர் சந்திரா தொடங்கி வைத்து கண்காட்சியை பார்வையிட்டனர் இதில் மாணவர்கள் ஹட்ராலிக் பிரிட்ஜ், ஹைட்ரோ போனிக் பிளாண்ட்,டி என் ஏ ,சோலார் சிஸ்டம், மெடிசின் பிளான்டஸ், டெய்ரி ஃபார்ம், வாட்டர் ஃப்யுரிஃபிகேஷன், டைப்ஸ் ஆஃப் எனர்ஜி ,பாரம்பரிய உணவு வகைகள் , கிளாசிஃபிகேஷன் ஆஃப் அனிமல் ஹாபிடேட், பஞ்சகவ்யம் மற்றும் பல்வேறு அறிவியல் சம்பந்தமான பொருட்கள் காட்சிப் படுத்தினர். அறிவியியல் கண்காட்சியில் பேராசிரியர் தபிதா விண்ணரசி, பரிதி ஓவியா, சரவணன், மரிய செல்வம், ரமேஷ்குமார், பள்ளி ஆசிரியர்கள் கயல்விழி , கனிமொழி, R. மகாலட்சுமி, S. விண்ணரசி , அருள்மொழி, E. சூரிய பிரகாஷ், K அஸ்வினி, B. சாமுண்டீஸ்வரி, K. கலைச்செல்வி, R. வெண்ணிலா, ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர் இதில் மாணவ மாணவிகள் பெற்றோர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். பேராசிரியர் ஈஸ்வரி நன்றி கூறினார்.

# அருள்மிகு வெங்கடேச பெருமாள் ஸ்ரீதேவி பூதேவி சமேத மச்ச அவதார பெருமாள் கோயிலில் மகா கும்பாபிஷேக விழா



கோவை மார்ச்:09

கோவை சின்ன தடாகம் காளையனூர் தண்ணீர் பந்தல் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு வெங்கடேச பெருமாள் ஸ்ரீதேவி பூதேவி சமேத மச்ச அவதார பெருமாள் கோயிலில் மகா கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.இதனை ஸ்ரீ சத்ய நாராயண பட்டார் பாஞ்ச ராத்ர ஆகம முறைப்படி நடத்தி வைத்தார்.மாசி மாதம் 18ம் நாள் முகூர்த்தக்கால் நடுதல் நிகழ்ச்சியுடன் துவங்கப் பட்ட நிகழ்வில், புண்ணிய தீர்த்த யாத்திரைக்கு பக்தர்கள் புறப்பாடு,முளைப்பாரி எடுத்து வருதல்,வாஸ்து சாந்தி முதல் கால யாக வேள்வி, ஆரம்பம் விஷ்வக்சேனர் ஆராதனை,இரண்டாம் கால யாக வேள்வி,லஷ்மி நாராயண ஹோமம், சுதர்சன ஹோமம் தொடர்ந்து மாசி மாதம் 22 ஆம் நாள் வெள்ளிக்கிழமை அன்று பெருமாளுக்கு காலை மகா கும்பாபிஷேகம் விழா விமர்சையாக நடைபெற்றது.இதில் கோயில் நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு கும்பாபிஷேகம் நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## புதுச்சேரி வில்லியனூர்: மகளிர் தின விழா எம்.எல்.ஏ ஆர்.சிவா நலத்திட்ட உதவிகளை வழங்கினார்!



புதுச்சேரி, மார்ச். 9–
புதுச்சேரி கொம்பாக்கம் துர்கா நகர் பகுதியில், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு திமுக சார்பில் மிகச் சிறப்பான முறையில் மகளிர் தின விழா கொண்டாடப் பட்டது.

திமுக பிரமுகர் துர்கா நகர் ரமேஷ் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவிற்கு, வில்லியனூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், திமுக மாநில அமைப்பாளருமான அண்ணன் ஆர்.சிவா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைத்து மகளிர்க்கும் தனது மனமார்ந்த மகளிர் தின வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொண்ட ஆர்.சிவா எம்.எல்.ஏ, மகளிரின் முன்னேற்றம் மற்றும் அவர்கள் சமூகத்தில் பெறும் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார். தொடர்ந்து, அப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான பெண் களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

இந்த விழாவில் திமுக நிர்வாகிகள் மற்றும் முக்கியப் பிரமுகர்களான: தேசிகன், அச்சுதன், சக்திவேல் பாஸ்கர், சசிகுமார், பிரகாஷ் சிவப்பிரகாசம், நடராஜன், குமார் வெங்கடேஷ், தீபன், குருநாதன், பாலா மற்றும் திமுக மகளிர் அணியினர் உள்ளிட் டோர் திரளாகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளைத் துர்கா நகர் ரமேஷ் மற்றும் அவரது குழுவினர் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

## ஏழை மக்கள் கழகம் நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் உலக பெண் தெய்வங்களுக்கு மகளிர் தினம் வாழ்த்துக்கள்



ஏழை மக்கள் கழகம் நிறுவனர் தலைவர் பூக்கடை கமலக்கண்ணன் அவர்கள் வாழ்த்து செய்தி புதுச்சேரி 8.3.2026 அன்று உலக மகளிர் தினம் நல் வாழ்த்துக்கள் நமது பாரத நாட்டின் வளர்ச்சிக்கு முழு காரனம் மகளிர் பென்கள் நமது நாட்டின் கண்கள் அகில உலக பென் தெய்வங்களுக்கும் ஏழை மக்கள் கழகம் சார்பாக இனிய மகளிர் தினம் நல் வாழ்த்துக்கள் மகளிர் வளர்ச்சியே இந்த களியுக வளர்ச்சி மகளிர் வளர்ச்சியே ஏழை மகளிர் வளர்ச்சி வாழ்க மகளிர் வளர்க பென் தெய்வங்கள் ஏழை மக்கள் கழகம் மகளிர் அணிகள் மற்றும் அனைத்து அரசியல் கட்சி மகளிர் அனைத்து சமூக சேவை அமைப்பு மகளிர் அனைத்து அறக்கட்டளை மகளிர் அனைத்து சங்கங்களின் மகளிர் அனைத்து சுயஉதவி குழுக்களின் மகளிர் என அனைவருக்கும் வாழ்த்துக்கள் பென் தெய்வங்கள் பல நூராண்டு வாழ்க மக்ளிர் வளரட்டும்

## புதுச்சேரி வக்ஃப் வாரிய நியமனங்களைக் கண்டித்து தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!





புதுச்சேரி , மார்ச்.9
புதுச்சேரி யூனியன் பிரதேச வக்ஃப் வாரிய நியமனங்களில் தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைக் கண்டித்து, தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் (TNTJ) புதுச்சேரி மாவட்ட தலைமையகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மத்திய அரசு கொண்டு வந்த புதிய வக்ஃப் திருத்தச் சட்டத்தில், வக்ஃப் வாரியத்தில் முஸ்லிம் அல்லாத இரு வரை உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்ற பிரிவுக்கு நாடு முழுவதும் கடும் எதிர்ப்பு எழுந்து வருகிறது. இந்நிலையில், புதுச்சேரி வக்ஃப் வாரியத் தின் உறுப்பினராக, ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தில் பயிற்சி பெற்ற பா.ஜ.க மாநிலங்களவை உறுப் பினர் செல்வ கணபதி நியமிக்கப்பட்டிருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 11 ஆண்டுகளுக்கும் மேலாக தலைமைச் செயல் அதிகாரியை நியமிக்காமல் முடக்கி வைக்கப்பட்டிருந்த வக்ஃப் வாரியத்தில், தற்போது சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு அவசர அவசரமாக இந்த நியமனம் செய்யப்பட் டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கு மாறாகப் பேசி வருபவரை வக்ஃப் வாரியத்தில் உறுப்பினராக நியமிப்பது "பாலுக்குப் பூனை காவல்" என்பது போல் அமையும் என ஆர்ப்பாட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய நியமனங்களால் வக்ஃப் சொத்துக்கள் அபகரிக்கப் படுமோ என்ற அச்சம் முஸ்லிம் மக்களிடையே அதிகரித்துள்ளதாகக் கூறப்பட்டது.

இந்த மாபெரும் மக்கள் திரள் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு புதுச்சேரி மாவட்டத் தலைவர் ஹபீப் ரஹ்மான் தலைமை தாங்கினார். தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்தின் மாநிலப் பொதுச்செயலாளர் கி. முஜிபுர் ரஹ்மான் கண்டன உரையாற்றி னார். ஆண்களும், பெண் களும், குழந்தைகளும் திரளாகக் கலந்து கொண்ட இந்தப் போராட்டம் எழுச்சி யூட்டும் முழக்கங்களுடன் அமைதியான முறையில் நடைபெற்றது. இறுதியில் மாவட்டப் பொருளாளர் அபு பக்கர் நன்றியுரை வழங்கினார்.

புதுச்சேரி அரசு உடனடியாக இந்தத் தவறான நியமனத்தைத் திரும்பப் பெற்று, வக்ஃப் வாரியம் முறையாகச் செயல்படத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என இந்த ஆர்ப்பாட்டத்தின் வாயிலாக வலியுறுத்தப் பட்டது.

## திருச்சியில் 9ஆம் தேதி கழகத்தின் மாநில மாநாடு அணிதிரண்டு செல்வோம் வாரீர்!வாரீர்!!

### கழக உடன்பிறப்புகளுக்கு அமைப்பாளர் இரா. சிவா அழைப்பு

திராவிட முன்னேற்றக் கழகம் மாநில மாநாடுகளை கொள்கை முழக்கத்தோடு நடத்தி தொண்டர்களை உற்சாகப்படுத்துவதை மரபாக கையாண்டு வருகிறது. அதன்படி, 2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.கழகத்தின் பலத்தை நிரூபிக்கும் வகையில் 12ஞ்வது மாநில மாநாடு திருச்சி மாவட்டம் சமயபுரம் அருகே உள்ள சிறுகனூரில் 9ஆம் தேதி திங்கள்கிழமை நடைபெறுகிறது.

நம் உயிரினும் மேலான கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் முதல்வர் அண்ணன் தளபதியார் அவர்கள்



தலைமையில், "தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்" என்ற தலைப்பில் நடைபெறும் இம்மாநாட்டில் புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பெரும் பங்களிப்பை அளிப்பது அனைத்து உடன்பிறப்புகளின் கடமை.

ஆகவே, சிறப்புமிக்க இம்மாநாட்டில் "இப்படை தோற்கின் எப்படி வெல்லும்" என்கிற கூற்றை பறைசாற்றுகின்ற வகையில் மாநில கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், மொழிப்போர் தியாகிகள், மூத்த முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று 9ஆம் தேதி காலை 11.00 மணிக்கு லப்போர்த் வீதியில் உள்ள தலைமைக் கழகத்தில் ஒன்றிணைந்து கட்டுப்பாடோடு மாநாட்டிற்கு பயணிப்போம் வாரீர் ! வாரீர் !! என அன்புடன் அழைக்கின்றேன்.

## லட்சிய ஜனநாயக கட்சியின் அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும், அடிப்படை உறுப்பினர் தகுதியிலிருந்தும் நான் விலகிக்கொள்கிறேன்: ஐ.ஜி. பிரபாதேவி வீரராகு,

புதுச்சேரி உழவர்கரை தொகுதி வாழ் பொதுமக்களுக்கு அன்பான வணக்கம்.

நானும், எனது கணவர் ஐ.ஜி. வீரராகு அவர்களும் அருண் சர்மா சாரிட்டபிள் டிரஸ்ட் (Arun Sharma Charitable Trust) மூலமாக, கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக உழவர்கரை தொகுதி மக்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளையும், மக்கள் நலப் பணிகளையும் எவ்வித எதிர்பார்ப்புமின்றித் தொடர்ந்து செய்து வருகின்றோம்.

மக்களுக்கு இன்னும் விரிவான முறையில் சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கில், புதுச்சேரியில் புதிதாக உதயமான லட்சிய ஜனநாயக கட்சியில் இணைந்து, அதன் மாநில மகளிர் அணித் தலைவியாகப் பொறுப்பேற்றுச் சில காலம் பணியாற்றி வந்தேன்.

இருப்பினும், கட்சிப் பணிகளின் காரணமாக எனது தொகுதி மக்களை முழுமையான முறையில் சந்திக்க முடியாத சூழலும், நலத்திட்ட உதவிகளைச் செய்வதில் சில நடைமுறைச் சிக்கல்களும் ஏற்படுவதை உணர்கிறேன். எனக்குப் பதவி மற்றும் பொறுப்புகளை விட, தொகுதி மக்களின் நலமே முதன்மையானது.

எனவே, உழவர்கரை தொகுதி மக்களுக்கு என்னால் முடிந்த முழுமையான சேவையைத் தொய்வின்றித் தொடர வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, லட்சிய ஜனநாயக கட்சியின் அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும், அடிப்படை உறுப்பினர் தகுதியிலிருந்தும் நான் விலகிக்கொள்கிறேன் என்பதைப் புதுச்சேரி மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனிவரும் காலங்களிலும், எப்போதும் போல அருண் சர்மா சாரிட்டபிள் டிரஸ்ட் வாயிலாக உழவர்கரை தொகுதி மக்களுடன் இணைந்து, உங்கள் வீட்டுப் பிள்ளையாக மக்கள் பணிகளைத் தொடர்வேன் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## செங்கல்பட்டு அருகே குழாய் உடைந்து வீணாகும் பாலாறு நீர்: நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்

செங்கல்பட்டு: செங்கல்பட்டு காஞ்சிபுரம் சாலையில் உள்ள தேவனூர் பாலாற்று பகுதியில், பல்வேறு கிராமப் பகுதிகளுக்கு செல்லும் பாலாற்று குடிநீர் பைப்லைனின் 2 இடங்களில் உடைப்பு ஏற்பட்டு, சாலை முழுவதும் மக்களுக்கு பயன்பட வேண்டிய குடிநீர் சுமார் 20 அடி உயரத்துக்கு தண்ணீர் பீய்ச்சி அடித்தபடி வீணாக வெளியேறி வருகிறது.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் பலமுறை புகார் தெரிவித்தும், பைப்லைன் உடைப்பை சரிசெய்யும் நடவடிக்கை எடுப்பதில் அதிகாரிகள் அலட்சியம் காட்டி வருவதாக கூறப்படுகிறது. இதனால் செங்கல்பட்டு அருகே தேவனூர், வில்லியம்பாக்கம், ரெட்டிபாளையம், பாலூர், கொளத்தாஞ்சேரி, கொங்கனாஞ்சேரி, உள்பட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடு அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, இப்பிரச்னையின் தீவிரத்தை கருத்தில் கொண்டு, பாலாற்று குடிநீர் பைப்லைனில் ஏற்பட்டுள்ள உடைப்புகளை சரிசெய்து, சீரான குடிநீர் வினியோகத்துக்கு மாவட்ட கலெக்டர் மற்றும் சம்பந்தப்பட்ட துறை உயர் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

## உருளையன்பேட்டையில் நேயம் மக்கள் கழகம் சார்பில் உலக மகளிர் தின விழா!



புதுச்சேரி | மார்ச் 09
உலகெங்கிலும் உள்ள தாய்மார்கள், சகோதரி கள் மற்றும் தோழமை களைக் கௌரவிக்கும் விதமாக ஆண்டுதோறும் மார்ச் 8ஆம் தேதி உலக மகளிர் தினம் கொண் டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், புதுச்சேரி மகளிரைப் பெருமைப்படுத்தும் விதமாக, நேயம் மக்கள் கழகம் சார்பில் ராஜா நகர் அய்யனார் கோவில் வீதியில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் உலக மகளிர் தின விழா சிறப்பாக நடைபெற்றது.

உருளையன் பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், நேயம் மக்கள் கழகத் தலைவருமான G.நேரு (எ) குப்புசாமி MLA தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

நேயம் மக்கள் கழக மகளிர் அணியைச் சேர்ந்த N.வசந்தி நேரு முன்னிலையில் விழா நிகழ்வுகள் தொடங்கின.

நிகழ்ச்சி விவரம்: விழாவில் மகளிர் தினத்தை முன்னிட்டு கேக் வெட்டப்பட்டு வாழ்த்துகள் தெரிவிக்கப் பட்டது. தொடர்ந்து மகளிர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப் பட்டன.

இந்த விழாவில் கழகத்தின் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர்:
P.சீத்தாராமன் (துணைத் தலைவர்)
E.விநாயகம் (பொதுச் செயலாளர் – தட்டாஞ் சாவடி தொகுதி கழக வேட்பாளர்)
R.சுந்தர் (துணை பொதுச் செயலாளர்)
N.செல்வம் (எ) ராமச் சந்திரன் (பொருளாளர்)
கராத்தே J.சுந்தர் ராஜன் (எ) ராஜப்பா (நெல்லித்தோப்பு தொகுதி வேட்பாளர்)
N.ரகு (எ) ரகோத்தமன் (மனிதநேய மக்கள் சேவை இயக்க இளைஞர் அணி தலைவர்)
N.ரஞ்சித்குமார் (தொழிலதிபர்)

மேலும், கழகத்தைச் சேர்ந்த அஞ்சலிதேவி (முன்னாள் நகராட்சி உறுப்பினர்), கலையரசி, வசந்தி, ராஜாம்பாள், லட்சுமிபாபு, அபிதமிழ், மகாதேவி, வேளாங் கண்ணி, அமுதா ஏழுமலை, லட்சுமி ராஜி, யோமலதா, சரஸ்வதி, இந்திரா, பிரியா, ஜெயஸ்ரீ மற்றும் திரளான மகளிரும், பொதுமக்களும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

## புதுச்சேரி மாநிலங்களவை உறுப்பினர் செல்வகணபதி எம்.பி., பயனாளிகளுக்கு ஓய்வூதிய ஆணைகளை வழங்கினார்!





புதுச்சேரி, மார்ச். 9–
மாநிலங்களவை உறுப்பினர் சு. செல்வ கணபதி பரிந்துரையின் பேரில், மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறை சார்பில் முதியோர், விதவை மற்றும் ஆதரவற்றோருக்கான உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

புதுச்சேரி நாடாளு மன்றத் தொகுதிக்குட் பட்ட பல்வேறு பகுதி களைச் சேர்ந்த முதியோர், விதவை மற்றும் ஆதரவற்றோர் பலர் தங்களுக்கு அரசு உதவித்தொகை பெற்றுத் தருமாறு மாநிலங்களவை உறுப்பினர் சு. செல்வ கணபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இதனைத் தொடர்ந்து, அவரது பரிந்துரையின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட 32 பயனாளிகளுக்கு ஓய்வூதிய ஆணைகள் வழங்கும் விழா நடைபெற்றது. சு. செல்வகணபதி தனது அலுவலகத்தில் வைத்து இந்த ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்வில் மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்துறை இயக்குனர், அதிகாரிகள், பாரதிய ஜனதா கட்சி லாஸ்பேட்டை தொகுதி தலைவர், நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





வேலூர் மாவட்டம் கே வி குப்பம் அடுத்த நாகல் கிராமத்தில் முதுகு தண்டால் பாதிக்கப்பட்ட மாணவி தேசிய அளவில் டேபிள் டென்னிஸ் பிரிவில் விளையாட தகுதி பெற்று இருந்தார். அவருக்கு கடந்த வாரம் போக்குவரத்து செலவுக்காக 5,000 உதவி வழங்கியிருந்தேன். இதனை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டிருந்தேன் இதனை பார்த்த நாகல் ஊராட்சி மன்ற தலைவர் திரு.பாலா தன்னுடைய பங்குக்கு இந்த மாணவிக்கு டேபிள் டென்னிஸ் ரிமிஜி வாங்கிக் கொள்ள நிதி உதவியாக 25 ஆயிரம் வழங்கினார்.

நாகல் ஊராட்சி மன்ற தலைவருக்கு நீதிகதிர் நாளிதழ் சார்பாக வாழ்த்துக்கள்

# சேலத்தில் இபிஎஸ் வாக்குறுதி; பெண்களுக்கு மாதம் ரூ.2000,5 லட்சம் பெண்களுக்கு பைக்குகள்.

சேலம். மார்ச். 9–

மகளிர் உரிமைத் தொகையை ரூ.2,000 ஆக உயர்த்தி வாக்குறுதி அளித்தது அதிமுக தான் என சேலத்தில் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார்.



சேலத்தில் அதிமுக சார்பில் நடைபெற்ற மகளிர் தின விழாவில், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கலந்து கொண்டு கேக் வெட்டினார். பின்னர் கேக்கை மகளிர் அணியினருக்கு வழங்கி மகளிர் தின வாழ்த்து தெரிவித்துக் கொண்டார். இதில் சேலம் புறநகர் மாவட்ட செயலாளர் இளங்கோவன், ஏற்காடு எம் எல் ஏ சித்ரா, அதிமுக மகளிர் அணியினர் திரளாக கலந்து கொண்டனர். .

பின்னர், செய்தியாளர்களிடம் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி கூறியது: "மகளிர் உரிமைத் தொகை ரூ 2,000 ஆக உயர்த்தி வாக்குறுதியில் நான் அறிவித்திருந்தேன். இதைத் தான் ஸ்டாலின் அறிவித்திருக்கிறார்.

இலவசம் கூடாது என்ற விஜய் தற்போது இலவசங்களை அறிவித்திருப்பது குறித்து அவரிடம்தான் கேட்க வேண்டும்.

ஒவ்வொரு கட்சியும் தேர்தல் நேரத்தில் வாக்குறுதி தரும். எங்களது கட்சியும் தேர்தல் வாக்குறுதியை அளித்துள்ளது. அதிமுக தேர்தல் அறிக்கையில் என்னென்ன செய்தோம் எனத் தெளிவாக ட்விட்டரில் விளக்கி உள்ளோம். அதன்படி, அதிமுக ஆட்சி அமைந்ததும் நாங்கள் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்.

'அம்மா இருசக்கர வாகனம்' தரப்படும் என அறிவித்து இருக்கிறோம். 5 லட்சம் மகளிருக்கு ரூ. 25 ஆயிரம் மானியத்தில் இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளோம். அவற்றை செய்வோம்" என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.

முன்னதாக தனது எக்ஸ் பக்கத்தில் மகளிர் தின வாழ்த்தை பகிர்ந்த இபிஎஸ், "எனது அன்பிற்குரிய தாய்மார்களுக்கும், எனதருமை சகோதரிகளுக்கும், எதிர்காலத்தை ஆளப் போகும்இளம்கண்மணிகளுக்கும் எனது உளம் கனிந்த மகளிர் தின நல்வாழ்த்துகள்! ஒரு குடும்பத்தின் ஆணிவேராக இருந்து, துன்பங்களை சுமந்து அன்பையும் அரவணைப்பையும் வாரி வழங்கும் பெண்களின் தியாகத்திற்கு ஈடு இணை ஏதுமில்லை. இதனை உணர்ந்துதான் ஜெயலலிதா பெண்களுக்கான பல புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டு வந்தார். இன்றைய விடியா திமுக ஆட்சியில், பாதுகாப்பற்ற சூழ்நிலையாலும், விலைவாசி உயர்வாலும், தத்தளிக்கும் பெற்றோர்கள் மற்றும் குடும்பத் தலைவிகளின் கவலை எனக்கு நன்றாகவே புரிகிறது. அந்த சுமையை குறைப்பதே எனது முதல் கடமை!

அஇஅதிமுக ஆட்சி அமைந்தவுடன், குடும்பத்தின் பொருளாதார தூணாக இருக்கும் பெண்களுக்கு மாதம் ரூ. 2,000 உதவித்தொகை வழங்கப்படும். இது வெறும் பணம் அல்ல, பெண்களின் உழைப்புக்கான அங்கீகாரமும் மரியாதையும் ஆகும். பெண்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்ற எங்கள் அன்பின் அடையாளமுமாகும்.

மகளிர் சுயமாக சாதிக்க உதவும் வகையில் 5 லட்சம் பெண்களுக்கு மானிய விலையில் இருசக்கர வாகனங்கள் வழங்கும் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்.

உங்கள் கனவுகள் நனவாக, உங்கள் பாதுகாப்பு, நீங்கள் பயணிக்கும் போதும், நம் பிள்ளைகள் படிக்கின்ற இடங்களிலும், உங்கள் பணியிடங்களிலும் உறுதி செய்யப்பட, நான் என்றும் உங்களுக்கு உறுதுணையாக இருப்பேன் என்பதை அன்போடு தெரிவித்து கொள்கிறேன், தாயுள்ளத்தோடு தன் கடமைகளை ஆற்றி வரும் சகோதரிகள் அனைவருக்கும், மீண்டும் நல்வாழ்த்துக்கள்" என்று தெரிவித்துள்ளார்.

# பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தார் சாலையை சீரமைத்த எம்எல்ஏ வுக்கு பாராட்டு!!





திருப்பூர் :மார்ச்09

அனுப்பர்பாளையம். திருப்பூர் மாநகராட்சி 25 வது வார்டு சோளி பாளையம் பாட்டையப்பன் நகர் அதிக பனியன் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதியில் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட தார் சாலையை சீரமைத்து புதிதாக தார் சாலை அமைக்க வேண்டும் என்று. மாமன்ற உறுப்பினர் தங்கராஜ் அவர்களின் முயற்சியால் மீண்டும் அதே பகுதியில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு வடக்கு அதிமுக சட்டமன்ற உறுப்பினர் கே. என் விஜயகுமார்

உடனடியாக அப்பகுதியில் தார் சாலைகளை சீரமைக்க வேண்டும் மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதை தொடர்ந்து அப்பகுதி முழுவதும் தார் சாலைகள் சீரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் எம் எல் ஏ அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து நன்றி தெரிவிக்கப்பட்டது..




கோயம்புத்தூர் மாவட்டம் சூலூர் ஆர்.வி.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் சூலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 598 பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டாக்களை கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர கணபதி ப.ராஜ்குமார் வழங்கினார். உடன் சூலூர் பேரூருாட்சி தலைவர் தேவி மன்னவன், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், வருவாய் கோட்டாட்சியர் (தெற்கு) மாருதிப்ரியா, சூலூர் வட்டாட்சியர் செந்தில் குமார் உட்பட பலர் உள்ளனர்.

# போக்குவரத்து தொழிலாளர் கோரிக்கையை வலியுறுத்தி அண்ணா தொழிற்சங்க பேரவை மார்ச் 13ல் ஆர்ப்பாட்டம்

அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு ஒப்பந்த பணப் பலன்கள், விடுப்பு ஒப்படைப்பு உள்ளிட்ட நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றாமல் காலம் தாழ்த்தி வரும் நிர்வாகத் திறனற்ற திமுக அரசைக் கண்டித்தும், தொழிலாளர்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வலியுறுத்தியும்,

அதிமுகவின் அண்ணா தொழிற் சங்கப் பேரவை சார்பில் மார்ச் 13ம் தேதி மாலை 3 மணிக்கு சென்னை பல்லவன் இல்லம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் தலைமையில், அண்ணா தொழிற்சங்கப் பேர வைச் செயலாளர் ஆர்.கமலக் கண்ணன், தலைவர் தாடி ம.இ ராசு, பொருளாளர் எம்.அப்துல் அமீது முன்னிலையில் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பேரவையின் மாநில நிர்வாகிகள், போக்குவரத்துப் பிரிவு நிர்வாகிகள். தொழிலாளர்கள் பெருந்திரளாகக் கலந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# 5 கிராமங்களை தத்தெடுத்த சேலம் அரசு கலைக் கல்லூரி.




உன்னதபாரததிட்டத்தின்கீழ்,சேலம் அரசு கலைக் கல்லூரி சார்பில் 5 கிராமங்கள் தத்தெடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

சேலம் கொண்டப்பநாயக்கன்பட்டி ஊராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வுக்கு, கல்லூரி முதல்வர் ஐ.பிரேமலதா (பொ) தலைமை வகித்தார். திட்ட ஒருங்கிணைப்பாளர் பிச்சைமுத்து வரவேற்றார். மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார் உன்னத பாரத திட்டத்தின் சிறப்பம்சங்களை எடுத்துரைத்தார்.

தொடர்ந்து, சிறப்பு விருந்தினராக பங்கேற்ற உன்னத பாரத திட்ட அகில இந்திய மண்டல இயக்குநர் கே.ரவிச்சந்திரன் பேசுகையில், கிராம பஞ்சாயத்துகளை தத்தெடுப்பதன் மூலம் சமூக மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுப்பதுடன், வளர்ந்த பாரதத்துக்கான இலக்குகளை விரைவில் எட்ட முடியும். இதன்மூலம் கிராமப்புறங்கள் நிலையான, நீடித்த வளர்ச்சியை எட்டும் என்றார்.

இந்நிகழ்வில், அரசு கலைக் கல்லூரி உள்ளக மதிப்பீட்டுக் குழு ஒருங்கிணைப்பாளர் விஜயகுமார், உன்னத பாரத திட்ட உறுப்பினர்கள், கிராம நிர்வாக அதிகாரி வனிதா, கொண்டப்பநாயக்கன்பட்டி ஊராட்சி முன்னாள் தலைவர் கே.எம்.ராஜா, கிராம மக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# பெண்கள் சக்தி மிக்கவர்கள்: எக்ஸ்னோரா உலக மகளிர் தின விழாவில் சப் கலெக்டர் பேச்சு..!



வந்தவாசி, மார்ச் 09:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்ட எக்ஸ்னோரா கிளை சார்பில் உலக மகளிர் தின விழா ரோட்டரி கிளப் அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு கிளை தலைவர் சு. தனசேகரன் தலைமை தாங்கினார். மாவட்ட நிர்வாகிகள் மலர் சாதிக், ம.ரகுபாரதி, துணை தலைவர்கள் க.வாசு, பா.சீனிவாசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொருளாளர் அ.பூவிழி வரவேற்றார்.

எக்ஸ்னோரா மாவட்ட தலைவர் பா.இந்திரராஜன் 'மகளீரை போற்றுவோம்' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்.

சிறப்பு அழைப்பாளர்களாக, செய்யாறு சப்கலெக்டர் எல்.அம்பிகா ஜெயின், சப் கோர்ட் ஜட்ஜ் எஸ்.சரண்யா, ஓய்வுபெற்ற இணை இயக்குநர் சி.சாவித்திரி ஆகியோர் பங்கேற்று சாதனைப் பெண்களுக்கு விருதுகள் மற்றும் பரிசுகளை வழங்கி பாராட்டி பேசினர். மேலும் பல்திறன் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற பள்ளி மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. மேலும் இந்த நிகழ்ச்சியில் நகர் மன்ற உறுப்பினர் நாகூர் மீரான், எக்ஸ்னோரா கிளை நிர்வாகிகள் க. பூபாலன், இரா.பாஸ்கரன், எஸ்.கே.பூபதி, வி.மணி, அப்துல் ரஹ்மான், சத்யமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர். முன்னதாக வரவேற்பு நடனமும், எக்ஸ்னோரா உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியும் நடைபெற்றது. நிகழ்வை ஆலோசகர் கு.சதானந்தன் தொகுத்து வழங்கினார். இறுதியில் சங்க செயலாளர் சி.வினோத் குமார் நன்றி கூறினார்.


# தமிழக அரசை கண்டித்து 12ந்தேதி தமிழகம் முழுவதும் தவெக ஆர்ப்பாட்டம்",

"சென்னை:தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தமிழகம் முழுவதும் வருகிற 12ந் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.சாதிவாரி கணக்கெடுப்பு ஆய்வு நடத்தக்கோரியும், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, போதை பொருட்களை தடுக்க தவறிய தமிழக அரசை கண்டித்தும் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.இதுகுறித்து கட்சி சார்பில் நிர்வாகிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:தமிழக அரசை கண்டித்து நடைபெறும் ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டச் செயலாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் மனு அளித்து ஆர்ப்பாட்டத்திற்கு உரிய அனுமதி பெற்று நடத்த வேண்டும். மாவட்ட தலைநகரங்களில் காலை 10 மணி முதல் ஒரு மணி வரை நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர்கள், நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும்.இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.",



விழுப்புரம் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் உள்ள சிறுவர் பூங்காவில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2025–2026 திட்டத்தின் கீழ் கூடுதல் நடைபாதை மற்றும் சிறுவர்கள் விளையாட்டு உபகரணங்கள் அமைக்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா. இலட்சுமணன், முன்னிலையில் துவக்கி வைத்தார். உடன் விழுப்புரம் நகர்மன்ற தலைவர் தமிழ்செல்வி பிரபு உட்பட பலர் உள்ளனர்.

# வந்தவாசி கோட்டை ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் கோவில் மஹா கும்பாபிஷேகம்..!



வந்தவாசி, மார்ச் 09:

வந்தவாசியில் பழமை வாய்ந்த கோட்டை ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் ஆலய மஹா கும்பாபிஷேக விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அருள்மிகு சீதா சமேத ஸ்ரீ கோதண்டராமர் மற்றும் கோட்டை ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் ஆலய மஹா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. கடந்த மூன்று கால பூஜைகளாக சங்கல்பம், ஆசார்ய வரணம், அங்குரார்பணம், மஹ சாந்தி ஹோமம், சாற்று முறை உள்ளிட்டவைகள் நடைபெற்றது. மேலும் நடைபெற்ற யாகசாலை பூஜையில் புனித நீர் வைக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பிறகு வேத மந்திரங்கள் முழங்க கோபுர கலசங்களில் புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக் கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப் பட்டது. முன்னதாக மூல மூர்த்திகளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. பிறகு மாலை சீதா ராமர் திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421